முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2022 சனவரி

## (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2022-03-20
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

இலங்கைப் பிரசையான **நிசால்** என்பவர் 2018 யூன் 10 ஆந் திகதி தனது குடும்பத்துடன் அவுஸ்திரேலியா வுக்கு குடிபெயர்ந்ததுடன் அவுஸ்திரேலியாவில் தனது சொந்த வியாபாரத்தையும் ஆரம்பித்தார். அவருடைய பிரதான வியாபார வாடிக்கையாளர்கள் இலங்கையில் உள்ளனர். இதனால், அவர் அடிக்கடி இலங்கைக்கு வருகை தருகிறார். வரிமதிப்பாண்டு 2020/21 காலப்பகுதியில், வாடிக்கையாளர்களுடனான வியாபாரக் கூட்டம் ஒன்றில் பங்கேற்பதற்காக 2020 யூலை 05 ஆந் திகதி அவர் இலங்கைக்கு வருகை தந்ததுடன் 2020 நவெம்பர் 14 ஆந் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான இலங்கையின் வரிவிதிப்பு நோக்கத்திற்கு **நிசாலினுடைய** வதிவிட அந்தஸ்தை (residence status) **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட ஹப்பி கம்பனி** என்பது வெளிநாட்டுக் கொள்வனவாளர்களுக்கு ஆடைகளைத் தயாரித்து வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஒரு வதிவுள்ள கம்பனியாகும். இக்கம்பனி 100 இற்கும் மேற்பட்ட நிறைவேற்றுத்தர ஊழியர்களைக் கொண்டிருப்பதுடன் அதில் பெரும்பாலானவர்கள் தமது ஊதியத்தில் இருந்து தனியாள் முற்பண வருமான வரியை (APIT) கழிப்பதற்கு சம்மதத்தைத் தெரிவித்துள்ளனர். **வரையறுக்கப்பட்ட ஹப்பி கம்பனி** ஊழியர்களிடமிருந்து APIT ஐக் கழித்து, ஒவ்வொரு பொருத்தமான ஊழியருக்கும் வரி கழிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ஒன்றை வழங்குகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) APIT திட்டத்தின் கீழ் தொழில்தருநர் ஒருவரின் மூன்று (03) கடப்பாடுகளை (obligations) **குறிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(b) APIT திட்டத்தின் கீழ் தொழில்தருநர் ஒருவரால் வழங்கப்படும் வரி கழிக்கப்பட்டதை உறுதிப்படுத்து கின்ற சான்றிதழில் உள்ளடக்கப்படும் இரண்டு (02) உருப்படிகளை (items) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட ஸ்டார் வியூ (தனியார்) ஹோட்டலானது** சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அனுமதிப்பத்திரத்துடன் சுற்றுலா ஹோட்டல் ஒன்றாக இயங்குகிறது. **வரையறுக்கப்பட்ட ஸ்டார் வியூ (தனியார்) ஹோட்டலின்** 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| வருமான வகை | ரூபா |
|---|---|
| அறைகளிலிருந்தான வருமானம் | 12,540,000 |
| குடிக்கும் பானங்களிலிருந்தான வருமானம் | 3,450,000 |
| பங்கிலாப வருமானம் | 245,800 |
| | **16,235,800** |

**குறிப்பு:** அறை வருமானமானது சேவைக் கட்டணம் ரூபா 1,140,000/- இனை உள்ளடக்கியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான சுற்றுலா அபிவிருத்தி தீர்வையை (TDL) **மதிப்பிடுக.**

(05 புள்ளிகள்)

## வினா 04

**சுனில்** என்பவர் தனது குடும்பத்துடன் கண்டியில் வசிக்கிறார். வரிமதிப்பாண்டு 2020/21 காலப்பகுதியில், அவர் பிரசித்தி பெற்ற தேசிய பாடசாலை ஒன்றின் அருகிலுள்ள 2 ஏக்கர் காணிக்கு சொந்தக்காரரான **பெரேரா** என்பவருடன் அந்தக் காணியை ரூபா 200 மில்லியன் விலையில் கொள்வனவு செய்வதற்காக உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்கிறார். இதன் பொருட்டு பறிமுதல் செய்யக்கூடிய (forfeitable) வைப்பாக ரூபா 2 மில்லியனை அவர் செலுத்தியுள்ளார். உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட சிறிது நாட்களின் பின்னர் அவர் **(சுனில்)** அக்காணியை ஒவ்வொன்றும் 10 பேச்சர்ஸ் அளவுள்ள துண்டங்களாகப் பிரித்திருந்தார். அதன் பின்னர் மூன்று துண்டங்களை **பெரேராவுக்கு** மாற்றியதுடன் ஏனைய துண்டங்களை இரண்டு மாத காலத்தினுள் வேறு நபர்களுக்கு விற்றிருந்தார். விற்பனை வருமானத்திலிருந்து, மீதி ரூபா 198 மில்லியனை **பெரேராவுக்கு** அவர் செலுத்தியிருந்தார். இந்த முழுக் கொடுக்கல் வாங்கலிலிருந்தும் **சுனில்** ரூபா 6 மில்லியனை இலாபமாகச் சம்பாதித்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

“ராம் ஈஸ்வரா எதிர் C.I.R” வழக்கினை மேற்கோள் காட்டி **சுனிலால்** சம்பாதிக்கப்பட்ட இலாபம் ஒரு வரிவிதிக்கத்தக்க வருமானமா (taxable income) என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**வரையறுக்கப்பட்ட நியூ பெஷன் (தனியார்) கம்பனி** 2020 ஏப்ரல் 01 இல் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். அதன் பிரதம கணக்காளரால் தயாரிக்கப்பட்ட வரைவு வரிக் கணிப்பீட்டின்படி, வரிமதிப்பாண்டு 2020/21 இற்காக கம்பனி வரிவிதிக்கத்தக்க வருமானமொன்றைக் கொண்டிருக்கிறது. இக்கம்பனி வரி ஆலோசகரான உங்களை அணுகியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரித் திரட்டை கம்பனி சமர்ப்பிக்க வேண்டுமா என்பதை காரணங்களுடன் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரித் திரட்டைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வருமான வரித் திரட்டைச் சமர்ப்பிக்கத் தவறுவதன் மீது விதிக்கப்படக்கூடிய தண்டங்களைக் (penalties) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

**வரையறுக்கப்பட்ட சுனேரா கம்பனி** என்பது பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி ஆகும். இது கையினால் செய்யப்படும் வாழ்த்து அட்டைகள் மற்றும் ஏனைய அன்பளிப்புப் பொருள்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டுக் காலப் பகுதியில் இடம்பெற்ற விற்பனைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன (VAT நீங்கலாக):

| | ரூபா |
|---|---|
| ஏற்றுமதி விற்பனைகள் | 3,390,000 |
| SVAT பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கான உள்நாட்டு விற்பனைகள் | 4,237,500 |
| ஏனைய நபர்களுக்கான உள்நாட்டு விற்பனைகள் | 77,122,500 |

(2) காலாண்டின் காலப்பகுதியில் கம்பனி கீழ்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியுள்ளது :

| | ரூபா |
|---|---|
| மூலப்பொருள்களின் இறக்குமதி மீது | 825,000 |
| பொருள்களின் உள்நாட்டு கொள்வனவு மீது | 1,454,000 |
| பொருள்களின் விநியோகத்திற்காகப் பயன்படுத்தப்படும் மோட்டார் லொறி ஒன்றின் பழுதுபார்ப்புச் செலவு மீது | 28,540 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT ரூபா 350,000/-.

(4) காலாண்டுடன் தொடர்புடைய சகல இலகுபடுத்தப்பட்ட VAT (SVAT) வரவு உறுதிச்சீட்டுகளும் (credit vouchers) கம்பனியால் சேகரிக்கப்பட்டன.

(5) கம்பனி மாதாந்த VAT தவணைக் கட்டணங்களாக ரூபா 3,000,000/- செலுத்தியுள்ளது.

*(நியம VAT வீதம் 8 % எனக் கொள்க.)*

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக செலுத்தவேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதி சேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 07

**GS டிரேடர்ஸ்** என்பது **பீற்றர்** மற்றும் **சொய்ஸா** ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 1 : 2 எனும் விகிதத்தில் பகிர்ந்து கொண்டு நடத்திச் செல்கின்ற ஒரு பங்குடமை வியாபாரமாகும். அவர்களுடைய வியாபாரமானது வெளிப்புற உணவு வழங்கல் சேவைகளை வழங்குவதாகும்.

(1) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது :

| | **ரூபா** |
|---|---|
| மொத்த இலாபம் | 12,854,000 |
| காணி ஒன்றின் விற்பனையிலிருந்தான கணக்கீட்டு இலாபம் | 4,750,000 |
| நிலையான வைப்புகள் மீது பெறப்பட்ட வட்டி வருமானம் (மொத்தம்) | 150,000 |
| | **17,754,000** |
| கழி: விநியோகச் செலவுகள் | (2,554,000) |
| நிருவாகச் செலவுகள் | (4,580,000) |
| நிதிச் செலவுகள் | (540,000) |
| **பங்குடமையின் நிகர இலாபம்** | **10,080,000** |

(2) மேலுள்ள நிகர இலாபத்தைக் கணிப்பிடும்போது கீழ்வரும் செலவுகள் கழிக்கப்பட்டுள்ளன :

- பங்காளர்களுக்கான சம்பளங்கள்: **பீற்றர்** - ரூபா 1,600,000/-
  **சொய்ஸா** - ரூபா 2,400,000/-
- **பீற்றர்** பங்குடமைக்கு கடனொன்றை வழங்கியுள்ளதுடன் பங்குடமையால் அவருக்குச் செலுத்தப்பட்ட கடன் மீதான வட்டி ரூபா 325,000/- ஆகும்.
- பங்குடமையின் கணக்குப் பதிதல் வேலைகளுக்காக **சொய்ஸாவின்** மகளுக்குச் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 120,000/- ஆகும்.

(3) 2016 சனவரி 01 இல் ரூபா 4,500,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு காணி 2021 பெப்ரவரி 15 ஆந் திகதி ரூபா 9,250,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்தக் காணி, வியாபாரத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன் 2017 செப்ரெம்பர் 30 இல் இந்தக் காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 6,000,000/- ஆகும்.

(4) ஏனைய சகல செலவுகளும் வரிவிதிப்பு நோக்கத்திற்காக அனுமதிக்கத்தக்கவை எனக் கருதுக.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2020/21 இற்காக **GS டிரேடர்ஸின்** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) பங்குடமை வியாபார வருமானம் (04 புள்ளிகள்)

(b) பங்குடமையின் வரிவிதி வருமானம் (03 புள்ளிகள்)

(c) பங்குடமையின் செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், 2017 ஏப்ரல் 01 இல் கூட்டிணைக்கப்பட்ட **வரையறுக்கப்பட்ட மெகா (தனியார்) கம்பனி (MPL)** ஆனது இந்தியாவில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான **வரையறுக்கப்பட்ட ராவா கம்பனியின்** முழு உடைமையான ஒரு துணைக் கம்பனியாகும். **MPL** ஆனது வாகன மின்கலன்களை (பற்றரி) தயாரித்து, இந்தியாவிலுள்ள அதன் உடைமைக் கம்பனிக்கு ஏற்றுமதி செய்கிறது.

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **MPL** இன் நிதிக் கூற்றுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(1) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **MPL** இன் பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்று கீழ்வருமாறு :

| | ரூபா |
|---|---:|
| ஏற்றுமதி வருமானம் | 1,454,200,000 |
| விற்பனைக் கிரயம் | (896,500,000) |
| மொத்த இலாபம் | 557,700,000 |
| பிற வருமானம் | 6,589,400 |
| நிருவாக மற்றும் விநியோகச் செலவுகள் | (403,500,000) |
| நிதிச் செலவுகள் | (5,989,400) |
| **வரிக்கு முன்னரான நிகர இலாபம்** | **154,800,000** |

(2) பிற வருமானக் கூறுகள் :

| | ரூபா |
|---|---:|
| நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமானம் (மொத்தம்) | 1,589,400 |
| விலை கோரப்பட்ட பங்குகளின் விற்பனை மீதான இலாபம் | 5,000,000 |
| | **6,589,400** |

(3) நிருவாக மற்றும் விநியோகச் செலவுகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன :

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூபா 34,250,000/-.
- வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 15,425,000/-.
- ஆண்டின் காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து தொழில்நுட்ப அணியொன்று வருகை தந்திருந்ததுடன் அவர்களின் களியாட்டச் (entertainment) செலவுகளுக்காக கம்பனி ரூபா 1,145,000/- இனைச் செலவு செய்திருந்தது.

- வரிமதிப்பாண்டு 2017/18 இல் ரூபா 2,250,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப் பட்ட தளபாடம் 2020 டிசெம்பரில் ரூபா 265,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. விற்பனை மீதான கணக்கீட்டு நட்டம் ரூபா 96,000/-.
- கம்பனியானது அரசாங்கத்தின் கோவிட் 19 நிவாரண நிதியத்திற்கு ரூபா 1,000,000/- நன்கொடை அளித்திருந்தது. மேலும், கோவிட் 19 ஆல் பாதிக்கப்பட்ட கம்பனி ஊழியர்களுக்கு ரூபா 500,000/- நன்கொடை அளித்திருந்தது.

(4) நிதிச் செலவினங்கள் காலக் கடன்களுக்காகச் செலுத்தப்பட்ட வட்டியான ரூபா 5,989,400/- இனை உள்ளடக்கியுள்ளன.

(5) 2021 மார்ச் 31 இலான உரிமையாண்மை மற்றும் பரிப்புக்களின் விபரங்கள் கீழ்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | 10,000,000 |
| கைக்கொள் இலாபம் | 5,500,000 |
| செலுத்தவேண்டிய காலக் கடன் | 50,000,000 |

(6) 2021 மார்ச் 31 இல் ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு:

| சொத்து | கொள்வனவு ஆண்டு | கிரயம் (ரூபா) |
|---|---|---|
| காணி | 2017/18 | 86,000,000 |
| கட்டடம் | 2017/18 | 64,000,000 |
| இயந்திரம் | 2017/18 | 48,453,000 |
| இயந்திரம் | 2020/21 | 12,500,000 |
| பணிப்பாளரின் பயணங்களுக்குப் பயன்படுத்தப்படும் மோட்டார் கார் | 2019/20 | 18,450,000 |
| பொருள்களின் போக்குவரத்திற்கான லொறிகள் | 2018/19 | 64,120,000 |
| அலுவலக உபகரணம் | 2018/19 | 12,656,000 |
| கணினிகள் | 2019/20 | 1,875,000 |
| | | **308,054,000** |

(7) கம்பனியானது வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கட்டணங்களாக ரூபா 10,000,000/- ஐச் செலுத்தியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

வரிமதிப்பாண்டு 2020/21 இற்காக **வரையறுக்கப்பட்ட மெகா (தனியார்) கம்பனியின்** பின்வருவனவற்றை **மதிப்பிடுக**::

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி வருமான வரி

*(**குறிப்பு:** ஏதாவது செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

ஒரு வதிவுள்ள தனியாளான **ரத்னசிங்க** என்பவர் ஒரு மென்பொருள் பொறியியலாளர் ஆவார். அவர் இலங்கையிலுள்ள முன்னணி மென்பொருள் கம்பனியொன்றில் பணியாற்றுகிறார்.

வரிமதிப்பாண்டு 2020/21 (*இதன் பின்னர் ஆண்டு எனக் குறிப்பிடப்படும்*) இற்கான அவரது வருமானம் தொடர்பான கீழ்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) ஊழியத்திலிருந்தான (Employment) வருமானம் :

- மொத்த சம்பளம் - மாதாந்தம் ரூபா 375,000/-.
- 2020 ஏப்ரலில் செலுத்தப்பட்ட மிகையூதியம் (Bonus) - ரூபா 200,000/- (முன்னைய ஆண்டின் இலாபத்திலிருந்து). 2020 டிசெம்பரில் செலுத்தப்பட்ட மிகையூதியம் - ரூபா 100,000/- (நடப்பு ஆண்டின் இலாபத்திலிருந்து).
- கம்பனி அவருக்கு மாதாந்த எரிபொருள் படி (fuel allowance) ரூபா 60,000/- உடன் மோட்டார் கார் ஒன்றை (1,000 CC) வழங்கியுள்ளது.
- கம்பனி ஆண்டின் காலப்பகுதியில் அவருடைய கையடக்கத் தொலைபேசிக் கட்டணம் ரூபா 36,000/- இனை மீளளிப்புச் செய்திருந்தது.
- **ரத்னசிங்க** தனியாள் முற்பண வருமான வரியை (APIT) கழிப்பதற்கான சம்மதத்தை அவரது தொழில்தருநருக்கு வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(2) **ரத்னசிங்க** அவரது குடும்பத்தினருடன் வாடகைக்கு அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் வசிக்கிறார். பண்டாரவளையில் அவருக்கு அவரது தந்தையிடமிருந்து பரம்பரையாகக் கிடைத்த பங்களா ஒன்று உள்ளது. அவர் அதனை விடுமுறை பங்களா ஒன்றாகச் செயற்படுத்துகிறார். வருமான மற்றும் செலவின விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | **ரூபா** |
|---|---|
| விருந்தினர்கள் மூலமான வருமானம் | 12,000,000 |
| கழி : | |
| பங்களா ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளம் | 3,480,000 |
| மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசிச் செலவினங்கள் | 1,721,000 |
| பாதுகாப்பு விதிகளை மீறியமைக்காக மாநகர சபைக்குச் செலுத்திய தண்டப்பணம் | 1,000,000 |
| மாநகர சபைக்கு எதிரான வழக்கில் ஆலோசனைகளைப் பெறுவதற்காக வழக்கறிஞர் ஒருவருக்குச் செலுத்திய கட்டணம் | 500,000 |
| பங்களா பராமரிப்புச் செலவினங்கள் | 658,000 |
| **நிகர இலாபம்** | **4,641,000** |

(3) வரிமதிப்பாண்டு காலப்பகுதியில் **ரத்னசிங்க** கீழ்வரும் வட்டி வருமானத்தை பெற்றுக் கொண்டார் :

- இலங்கை ரூபா பெறுமதியிலான நிலையான வைப்புகள் மீது - ரூபா 84,500/-
- வெளிநாட்டு நாணய வங்கியியல் அலகு (FCBU) சேமிப்புக் கணக்கு மீது – 315 அமெரிக்க டொலர் (1 அமெரிக்க டொலர் = ரூபா 200/-)

அவர், வட்டி வருமானத்தின் மீது முற்பண வருமான வரியைக் கழிப்பதைத் தேர்வு செய்யவில்லை.

(4) வரிமதிப்பாண்டு காலப்பகுதியில் **ரத்னசிங்க** கீழ்வரும் கொடுப்பனவுகளைச் செய்துள்ளார் :

- மூத்த பிரசைகளுக்கான நிறுவனரீதியான பராமரிப்பு ஏற்பாடுகளுக்காகத் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தருமஸ்தாபனம் ஒன்றுக்கு காசாக ரூபா 100,000/- நன்கொடை.
- வருடாந்த மருத்துவக் காப்புறுதித் தவணைக்கட்டணம் ரூபா 150,000/-.
- தனது மகனின் உயர் படிப்புக்காக தனியார் பல்கலைக்கழகமொன்றுக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் ரூபா 700,000/-.
- தனியார் வைத்தியசாலையொன்றில் சத்திரசிகிச்சை செய்துகொண்ட அவரது மனைவியின் வைத்தியசாலைக் கட்டணம் ரூபா 445,000/-.

(5) வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக **ரத்னசிங்க** ரூபா 500,000/- செலுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

வரிமதிப்பாண்டு 2020/21 இற்கு **ரத்னசிங்க**வுக்காக பின்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய / (மேலதிகமாகச் செலுத்திய) மீதி வருமான வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்.

*(**குறிப்பு:** ஏதாவது வருமானம் வரிவிதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |